# இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள பொருளாதார உரிமைகள் தொடர்பான நடைமுறைகளும், அவற்றைப் பெற்றுக் கொள்வதில் பெண்கள் எதிர் நோக்கும் சவால்களும் : சம்மாந்துறை பிரதேசத்தின் மலையடிக் கிராமம் 01 ஐ மையப்படுத்திய ஓர் ஆய்வு

**WF.Naja[(1)], MB.Nafrin[(2)], KM.Nibras[(3)]**

[1, 2, 3] Department of Geography, south Eastern university of Srilanka
najawfgeo@gmail.com, nafrinmb@gmail.com, amirnibras69@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

உலக நாடுகளில் இஸ்லாம் குறித்து முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டாகவும் ஒருநாட்டின் வளர்ச்சியை ஏற்படுத்தும் கூறாகவும் பெண்ணிலை வாதிகளின் ஒரு கூற்றாகவும் பெண்களுக்கான பொருளாதார உரிமைகள் காணப்படுகின்றன. இலங்கையின் அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேசத்திற்கு உட்பட்டதாக மலையடிக்கிராமம் 01 எனும் கிராமநிலதாரி பிரிவு காணப்படுகின்றது. மலையடிக்கிராமம் 01 இல் முழுவதுமாக முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள். இங்கு இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள பொருளாதார உரிமைகளை அனுபவிப்பதில் பெண்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இதனால் இப்பிரதேசத்தில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வின் பிரதான நோக்கமாக மலையடிக்கிராமம் 01 இல் பெண்களுக்கான பொருளாதார உரிமைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கும் விதம் பற்றி இனங்காணல், பெண்களுக்கான பொருளாதார உரிமைகளுக்கு தடையாக உள்ள அம்சங்களை கண்டறிதல், அவற்றை களைவதற்கான தீர்வுகளை முன்வைத்தல், வழிகளை இணங்கானல், மற்றும் இஸ்லாமிய உரிமைகளை பெறும் வழிகளை உருவாக்கல் போன்றன காணப்படுகின்றன. இவ் ஆய்வினை மேற்கொள்தற்காக முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தி தகவல்கள் சேகரிக்கப்பட்டன. முதலாம் நிலைத்தரவுகளாக நேர்கானல், வினாக்கொத்து, கலந்துரையாடல் போன்றவையும் இரண்டாம் நிலைத்தரவுகளாக பிரதேச சபைத்தரவுகள், இணையத்தளம், கட்டுரைகள், நுல்கள் போன்றன பயன்படுத்தப்பட்டன. இப் பண்பு சார் மற்றும் அளவுசார் தரவுகளை பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதற்காக Microsoft office 2013(word,Excel) போன்ற மென்பொருட்கள் பயன்படுத்தபடுத்தப்பட்டன. பெண்களுக்கான விழிப்புனர்வை ஏற்படுத்துவதற்கு பல சங்க அமைப்புக்கள் காணப்படுவதுடன் இவற்றுக்கு தடையாக உட்கட்டமைப்பு வசதிகள் சீரின்மை, சிறந்த முகாமையின்மை, வழிகாட்டல்களின்மை, மக்கள் ஒத்துழைப்பின்மை போன்ற செயற்பாடுகள் காணப்படுகின்றன. இத்தடைகளை நீக்கி பெண்களை ஊக்குவிக்க அரச மற்றும் தனியார் வங்கிகளும் கடன் வசதிகளை இஸ்லாமிய அடிப்படையில் வழங்குதல் வேண்டும். ஒழுங்கமைந்த கருத்தரங்குகளை செய்தல் பொது மக்களின் ஒத்துழைப்புகளை பெறல் போன்றவற்றை விதந்துரைகளாக குறிப்பிடலாம். இப்பிரதேசத்தில் இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள பொருளாதார உரிமைகளைமேம்படுத்துவதற்கும் பொருளாதார மற்றும் சமுக ரீதியில் முக்கியம் பெறுவதற்கும் இவ்வாய்வு முக்கியம் பெறும் களமாக அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** பொருளாதார உரிமை, பெண்கள், இஸ்லாம்

**ஆய்வு அறிமுகம்**

மனித உரிமை என்பது எல்லா மனிதர்களுக்கும் உரித்தான அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும் ஆகும். இந்த உரிமைகள் மனிதர்கள், மனிதர்களாக பிறந்த காரணத்தால் அவர்களுக்கு கிடைத்த அடிப்படையான விட்டுக்கொடுக்க இயலாத மறுக்க முடியாத சில உரிமைகளாக கருதப்படுகின்றன. இனம், சாதி, நிறம், சமயம், பால், தேசியம், வயது, உடல், உளம் ஆகியவற்றுக்கு அப்பால் ஒவ்வொரு தனிமனிதருக்கும் இருக்கும் இந்த அடிப்படையான உரிமைகள், மனிதர்கள் சுதந்திரமாக, நிம்மதியாக, நலமாக வாழ அவசியமான உரிமைகளாக கருதப்படுகின்றன. மனித உரிமைகளுள் அடங்குவதாக கருதப்படும் குடிசார் மற்றும் அரசியல் உரிமைகளுள் வாழும், சுதந்திரம், கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரம், பண்பாட்டு உரிமை. உணவுக்கான உரிமை, கல்விக்கான உரிமை என்பன முக்கியமானவையாகும்.

மனித உரிமைகள் சட்டம் விரிவடைந்து பெண்களின் உரிமைகள் பற்றியும் அவர்களின் பாதுகாப்புக்கள் பற்றியும் சட்டங்கள் உருவாக்கப்பட்டன. பெண்களின் உரிமைகள் என்பது எல்லா வயதிலுமுள்ள பெண்களையும் குறிக்கின்றது. அன்றைய காலகட்டத்தில் பல நாடுகளிலும் சமூகங்களிலும் ஆண்களுக்கு கொடுக்கப்பட்ட இயல்பான உரிமைகள் கூட பெண்களுக்கு மறுக்கப்பட்டது. பொதுவாக மறுக்கப்படும் மகளிர் உரிமைகனை பின்வருமாறு வகைப்படுத்தலாம். உடல் மற்றும் மன சுதந்திரம், அரச பதவிகளை வகிக்கும் உரிமை, வாக்களிக்கும் உரிமை, இராணுவத்தில் பணியாற்றும் உரிமை, சமமான ஊதியம் பெறும் உரிமை, சொத்துரிமை, கல்வி உரிமை, மண வாழ்வு போன்றனவாகும்.

1948 ஆம் ஆண்டு கைக்கொள்ளப்பட்ட ஆவணம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை வழங்கியது. 1979 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் அவையில் பெண்களுக்கு எதிரான பாகுபாடு நீக்கப்பட்டது. இதனை இஸ்லாம் 1400 வருடங்களுக்கு முன்பே வழங்கிவிட்டது. மேற்குலகம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளை விட இஸ்லாம் பெண்களுக்கு அதனை விட சிறந்த உரிமைகளை வழங்கியுள்ளது.

அந்த வகையில் இந்திய துணைக்கண்டத்தில் அமைந்திருக்கும் 65610 கிலோமீறறர் பரப்புடைய ஒரு தீவே இலங்கையாகும். 20.2 மில்லியன் (மத்திய வங்கி 2013: 12)சனத்தொகையுடனான இலங்கை ஒரு பல்லின நாடாகும். இலங்கையில் பெண்களினதும் இவர்களது சமூக நிலையை நோக்குவோமாயின் தெற்காசிய நாடுகளின் ஏனைய பெண்களை விட இலங்கைப் பெண்கள் அனுகூலமானதொரு சமூக ஒதுக்கு முறைகள் தொடர்பில் குறைவான அழுத்தங்களைக் கொண்டுள்ளனர். ஏன ஆய்வாளர்களும் புத்திஜீவிகளும் கூறுகின்றனர்.

மேலும், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தொழிலாளர் பங்குபற்றும் பிரதான துறைகள் பற்றிய 2011 தகவலின் படி, விவசாயம் தானியம் கைத்தொழில்துறை மற்றும் சேவை துறை ஆகிய மூன்று தொழிற்துறையிலும் பெண்களின் பங்குபற்றுதல் முன்னோக்கியதாகவே இருப்பதாக காட்டுகிறது. சேவைத்துறையில் மட்டுமே ஆண்கள் 10.7 வீதத்தால் பெண்களை முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இது இவ்வாறு இருக்க முஸ்லிம் பெண்களின் தொழில் ரீதியான மற்றும் ஏனைய பங்குபற்றல் வீதமானது மிகவும் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இதற்கு காரணம் இஸ்லாமானது பெண்களுக்கு எதுவித உரிமைகளையும் வழங்காது அவர்களை அடிமைப்படுத்தி வைத்துள்ளது என்ற ஒரு குற்றச்சாட்டு மேற்கத்தேயவாதிகளாலும் பெண்ணிய வாதிகளாலும் பல காலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றதை அவதானிக்கலாம்.

ஆனால் உண்மையிலேயே இஸ்லாம் ஆண்களுக்கு வழங்கியதைப் போலவே பெண்களுக்கும் பல சமூக பொருளாதார ஆண்மீக உரிமைகளை வழங்கியள்ளது. ஆனால் நடைமுறைப்படுத்துவதிலும்

அனுபவிப்பதிலும் பெண்களுக்கு சமூகத்தில் பல தடைகளும் சவால்களும் காணப்படுகின்றன். இதனால் அவளால் அவளது உரிமைகளை அனுபவிக்க முடியாது போகின்றது. ஆகவே பிரச்சினை இஸ்லாத்திடம் இல்லை சமூகத்திடமே உள்ளது. இன்னும் சில உரிமைகள் இஸ்லாமிய வரையறையைத் தாண்டி அனுபவிக்கப்படுகின்றன. ஆகவேதான் இஸ்லாம் வழங்கியுள்ள பொருளாதார உரிமைகள் பற்றியும் அவை ஆய்வுப்பிரதேசமான மலையடிக் கிராமம் 01 இல் நடைமுறையிலுள்ள விதம் பற்றியும் அவற்றை அனுபவிப்பதில் முஸ்லிம் பெண்கள் எதிர் நோக்கும் சவால்கள் பற்றியும் இவ்ஆய்வு விளக்குகின்றது.

இஸ்லாம் ஆண்களுக்கு பொருளாதார உரிமைகளை வழங்கியுள்ளது போன்று பெண்களுக்கும் அவ்வாறான உரிமைகளை வழங்கியுள்ளது. இவை பொருளாதார உரிமைகள் தொடர்பான அடிப்படைகளை விளங்கி கொள்வதனுடாக இது பற்றிய அறியலாம். அந்த வகையில் இஸ்லாம் பெண்களுக்கு்_வழங்கியுள்ள <u>பொருளாதார</u> உரிமைகள் பின்<u>வருமாறு</u>

01. வாரிசுச் சொத்து பெறும் உரிமை
02. தொழில் செய்யும் உரிமை
03. வஸிய்யத் செய்யும் பெறும் உரிமை
04. கொடுக்கல் வாங்கல் உரிமை
05. வக்பு செய்யும் பெறும் உரிமை
06. ஸதகா செய்யும் உரிமை
07. இரவல் வாங்கும் வழங்கும் உரிமை
08. பினை நிற்கும் உரிமை
09. அடகு வைக்கும் உரிமை
10. பராமரிப்புக்கான உரிமை,
11. வருமானத்தை தானே வைத்திருப்பதற்கான உரிமை,
12. அன்பளிப்புக்கான உரிமை,
13. மஹர் எனும் திருமணக் கொடைக்கான உரிமை,
14. விவாகரத்தின் போதான பராமரிப்பைப் பெறும் உரிமை

இது போன்ற பல உரிமைகள் அமுல்படுத்தப்பட்டு இருப்பினும் அதனை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்கின்றனர்.

**ஆய்வுப் பிரதேசம்**

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் காணப்படுகின்ற ஒரு கிராம நிலதாரிப் பிரிவே மலையடிக் கிராமம்-01 ஆகும். இலங்கையில் காணப்படும் 25 மாவட்டங்களில் மூன்றாவது பெரிய மாவட்டமாக அம்பாறை மாவட்டம் காணப்படுகின்றது. இம்மாவட்டமானது வடக்கே மட்டக்களப்பையும் கிழக்கே வங்கக்கடலையும் தெற்கே அம்பாந்தோட்டையையும் மேற்கே மொன்றாகலையையும் எல்லைகளாக கொண்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள 20 பிரதேச செயலகப் பிரிவுகளில் சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவும் ஒன்றாகும். சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 20 கிராம நிலதாரி பிரிவுகளில் மலையடிக் கிராமம்-01 எனும் கிராம நிலதாரி பிரிவும் காணப்படுகின்றது. இது பிரதேச செயலகத்திலிருந்து 1.5km துரத்தில் உள்ளது. இதன் பரப்பளவு 0.32 சதுர கிலோமீற்றர் ஆகும். இது 571 குடும்பங்கள் உள்ளடக்கிய பிரதேசமாகும். இங்கு முழுமையாக முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.

சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பின்தங்கிய கிராம சேவகப் பிரிவுகளில் இதுவும் ஒன்றாகும். இதன் எல்லைகளாக பின்வருவன காணப்படுகின்றன.

- வடக்கு மலையடிக் கிராமம்-02 மல் 13ஆம் வீதியினையும்
- கிழக்கு மல்கம்பிட்டி வீதி கல்லரிச்சல் 02 கிராம சேவகப் பிரிவினையும்
- தெற்கு மல் 14ஆம் வீதி புளக் ஜே மேற்கு 01ஆம் வீதியினையும்
- மேற்கு அல்அர்சத் வீதி என்பனவற்றையும் கொண்டு அமைந்துள்ளன.

**ஆய்வுப் பிரச்சினை**

இன்று சமூகத்தில் பெண்கள் இஸ்லாம் வழங்கியுள்ள பொருளாதார ரீதியான உரிமைகளை அனுபவிப்பதில் பல சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இதில் ஆய்வுப் பிரதேசத்தில் இனம்காணப்பட்ட பிரச்சினைகளாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

01. பெண்கள் இஸ்லாம் வழங்கியுள்ள பொருளாதார ரீதியான உரிமைகளை அனுபவிப்பதில் பல சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அவ்வாறான சவால்களையும் அவற்றை பெறுவதிலுள்ள தடைகளையும் கண்டறிதல்.

02. ஆய்வுப் பிரதேசத்தில் நடைமுறையில் காணப்படும் பொருளாதார உரிமைகள் இஸ்லாமிய வரையறைக்கு உட்பட்டு அனுபவிக்கப் படுகின்றனவா? என்பதனை கண்டறிதல்.

03. இஸ்லாம் பற்றியும் இஸ்லாமிய பொருளாதார உரிமைகள் பற்றியும் முழுமையான அறிவு பெண்களிடம் உள்ளதா? என்பதயும் இஸ்லாமிய சமூக, கலாசார, பண்பாடுகளானது இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள பொருளாதார உரிமைகளை அனுபவிப்பதில் தடையாக உள்ளதா என்பதையும் தெளிவுபடுத்துதல்.

**ஆய்வு நோக்கம்**

- பெண்கள் பொருளாதார ரீதீயாக உரிமைகளை பெறுவதில் எதிர்நோக்கும் சவால்களை கண்டறிவதோடு அவற்றை பெற்றுகடகொள்வதிலுள்ள தடைகளையும் இனங்காணல்.
- இஸ்லாம் பெண்களுக்கு எவ்வகையான பொருளாதார ரீதியான உரிமைகளை வழங்கியுள்ளது என்பதனை ஆய்வுப்பிரச்சினையோடு தொடர்புபடுத்தி ஆராய்தல்.
- பெண்களின் பொருளாதார வளர்ச்சி முன்னேற்றம் என்பவற்றுக்கு தடையாக உள்ள காரணிகளை இனங்கண்டு தற்போது நடைமுறையில் காணப்படும் பொருளாதார உரிமைகள் இஸ்லாமிய வரையறைகுட்பட்டு பின்பற்றப்படுகின்றனவா என்பதையும் கண்டறிதல்.
- பெண்களுக்கான பொருளாதார உரிமைகளுக்கு தடையாக உள்ள அம்சங்களை களைவதற்கான தீர்வுகளை முன்வைத்தல், வழிகளை இணங்கானல் மற்றும் பொருளாதார உரிமைகளை பெறும் வழிகளை உருவாக்கல்.

**ஆய்வு முறையியல்**

ஆய்வினை திறன்பட செய்து முடிக்க ஆய்வுடன் தொடர்புடைய தரவுகள் இன்றியமையாததாகும். இவ்வாய்வினை சீராக செய்வதற்கு முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடதக்கதாகும். முதலாம் நிலைத்தரவுகளாக நேரடி அவதானிப்பு, வினாக்கொத்து,நேர்காணல் முறைகள் மூலமாக தரவுகள் பெறப்பட்டுள்ளன. இப்பிரதேசம் தொடர்பாக நன்கு அனுபவமுடையவர்கள் சிலருடனும் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது.

- வினாக் கொத்து – 100
- கலந்துரையாடல்- 10 பேர்
- நேர்காணல் -31 பேர்

இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், மலையடிக்கிராம பொருளாதர உத்தியோகத்தரின் அறிக்கைகள், இணையத்தளங்கள், கட்டுரைகள் சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள் போன்றன பகுப்பாய்வு செய்யப்பட்டு தரவுகள் பெறப்பட்டன.

| எண | தொழில் வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | ஆசிரியர் | 02 |
| 02 | வங்கி உத்தியோகத்தர் | 01 |
| 03 | சமுர்த்திஅபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 |
| 04 | பள்ளிவாசல் நிர்வாகி | 01 |
| 05 | Mid wife | 01 |
| 06 | எழுத்தாளர்கள் | 01 |
| 07 | இடியப்பம் சுடுதல் | 02 |
| 08 | மா இடித்தல் | 02 |
| 09 | தையல் வேலை | 02 |
| 10 | கோழி வளர்ப்பு | 02 |
| 11 | ஆண்கள் | 10 |
| 12 | கிராம நிலதாரி | 01 |
| 13 | மாணவர்கள் | 05 |

மூலம்: பிரதேச செயலகம், சம்மாந்துறை

**தரவுகளை முன்வைத்தலும் பகுப்பாய்வும்**

இவ்வாய்வுக்காக வினாக்கொத்து வழங்குதல்,நேர்காணல்முறை, கலந்துரையாடல் மற்றும் நேரடி அவதானிப்பு போன்ற முறைகள் ஆய்வு நுட்பங்களாக பயன்படுத்தப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டதுடன் அங்குள்ள பெண்களிடம் வினாக்கொத்துக்களை வழங்கி தரவுகள் சேகரித்ததுடன் அப்பிரதேசத்தில் உள்ள பொருளாதார உத்தியோகத்தரிடம் சென்று நேர்காணல் மூலமும், மலையடிக் கிராமம் 01 க்குச் சென்று நேரடி அவதானிப்புக்களை மேற்கொண்டதன் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. வினாக்கொத்தில் விடையளித்தவர்கள் , நேர்காணளில் பதிலளித்தோர்கள் போன்றவற்றின் எண்ணிக்கையைக் கொண்டும் முடிவுகள் பெறப்பட்டு ஆய்வு முடிவுகளை இலகுவாக விளங்கிக் கொள்வதற்காகப் புள்ளிவிபர நுட்பமுறை பயன்படுத்தப்பட்டு வரைபடங்கள், அட்டவணைகள் மூலமாக அவை முன்வைக்கப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

ஆய்வு எனும் பாதையில் பயணிக்கத் தொடங்கும் ஆய்வாளனுக்கு இலக்கிய மீளாய்வானது சிறந்ததோர் வழிகாட்டியாக ஆய்வாளனின் பயணப் பாதையை சீர்படுத்தி கொடுக்கின்றது. ஆய்வினை சிறப்பான முறையில் நடத்திச் செல்ல, எண்ணக் கருவாக்க சட்டகமொன்றை உருவாக்க இலக்கிய மீளாய்வு மிகவும் அவசியமானது.அந்த வரிசையில் இவ்வாய்வு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் உலகளாவிய மற்றும் இலங்கை தேசத்தில் இன்றும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றது.

அக்பர், ஆர் ,(2013) “பெண் நீதமும் நிதர்சணமும் எனும் நூலில், இஸ்லாம் ஆண்களுக்கு பொருளாதார உரிமைகளை வழங்கியுள்ளது போன்று பெண்களுக்கும் அவ்வாறான உரிமைகளை வழங்கியுள்ளது. என பெண்ணின் பெருமையை திறம்பட குறிப்பிடுகின்றார்.

சர்ராஜ். சா (2018) முஸ்லிம்களின் அன்னையான கதீஜா(ரலி) அவர்களை நாம் முன்மாதிரியாகக் கூறலாம். மக்கா நகரில் அவர்கள் புகழ் பெற்ற வியாபாரப் பெண்மனியாக விளங்கினார்கள். ஆனால் அவர்களது வியாபாரத்தை அவர்கள் சார்பாக அண்ணல் பெருமானார்(ஸல்) அவர்கள் மேற்கொண்டு வந்தார்கள்.

சர்ராஜ். சா.(2018) மேலும், திருமணத்தை எடுத்துக்கொண்டாலும் இஸ்லாத்தில் பொருளாதார ரீதியாக பெண்ணே பயனாளியாக இருக்கின்றாள். அவள் தனக்குத் தேவையான மஹரை வரப்போகின்ற கணவரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் உரிமையை பெண்களுக்கு இஸ்லாம் ஏற்படுத்தி இருக்கின்றது. அல்லாஹ் தன் திருமறையில் கூறுகின்றான் ''மனப்பூர்வமாக பெண்ணுக்குத் தரவேண்டிய திரு மனக்கொடையை (மஹர்) கொடுத்து விடுங்கள்,அவளாக ஏதேனும் அதிலிருந்து உங்களுக்கு அளித்தால் விருப்போடு அனுபவியுங்கள்'' (அல்குர்ஆன்4 4)

சர்ராஜ். சா.(2018) பல நுற்றாண்டுகளுக்கு முன்பாகவே இஸ்லாம் பெண்களுக்கு வாரிசுரிமையை வழங்கிவிட்டன. மனித உரிமை பற்றியும், பெண்கள் உரிமை பற்றியும் தற்போது மார்தட்டிப்பேசும் மேற்குலக நாடுகள் பெண்களுக்கான வாரிசுரிமை வழங்காத காலத்தில் இஸ்லாம் வழங்கியது அல்குர்ஆனில் சூறா அல் பகறா,சூறா அல் மாயிதா போன்ற அத்தியாயங்களில் ஒரு பெண்,மனைவி,தாய்,மகள், என்னும் நிலையில் எவ்வளவு பங்கை சொத்தில் இருந்து பெற வேண்டும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

மாலை மலர்.(2017),வழிபாட்டு உரிமையில்,சொத்துரிமையில்,விவாகரத்து உரிமையில் கல்வி கற்பதில் என அனைத்து உரிமைகளையும் வழங்கி அவர்களை கண்ணியப்படுத்திய மார்க்கம் இஸ்லாம்

மாலை மலர். (2017), முஸ்லிம் பெண் பருவமடைந்து விட்டால் எல்லா வகையான பொருளாதார உரிமைகளையும் பெறுகிறாள். திருமணத்திற்கு முன்பே பணம்,சொத்து ஆகியவற்றை சொந்தமாக்கிக் கொள்ள, முதலீடு செய்ய, அதனை அபிவிருத்தி செய்ய, செலவழிக்க உரிமை பெற்றவளாகிறாள். தனது சொத்தை தான நினைத்த வழிகளில் பயன்படுத்திக்கொள்ளலாம் எனும் உரிமையை பெண்களுக்கு இஸ்லாம் முன்பே வழங்கிவிட்டது ஆனால் இந்த உரிமையை பிரிட்டிஷ் அரசு 1870 ஆம் ஆண்டில்தான் பெண்களுக்கு வழங்கியது.

மாலை மலர்.(2017), ஒரு பெண்ணை திருமணம் செய்து கொடுப்பதற்கு பெற்றோரின் விருப்பத்தை விட பெண்ணின் விருப்பமே இன்றியமையாதது என்பதை இஸ்லாம் எடுத்துயம்புகின்றது.

Usmanihanoline.(2014) பிறப்பதில் உள்ள உரிமை, அறிவை பெருக்குவதில் உரிமை, கண்ணியம் கொடுக்கும் ஹிஜாப், திருமணத்தில் உரிமை, திருமண விலக்கிலும் இஸ்லாம் வழங்கியுள்ள உரிமை,வாரிசு உரிமை என்று எல்லாவற்றிலும் பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்துள்ள மார்க்கம் இஸ்லாம் ஆகும்.

இவ்வாறாக இவ்வாய்வு தொடர்பான இலக்கியங்களின் மீளாய்வு நீண்டு கொண்டு செல்கின்றது என்பதற்கு மேற்குறித்த சான்றுகள் காட்டுகின்றது எனலாம்.

**கலந்துயைாடலும் முடிவுகளும்**

இஸ்லாத்தை பொருத்தவரையில் அதன் வருகை முழுமனித சமூதாயத்திற்கும் ஓர் அருளாக அமைந்தது என்பது யாவரும் அறிந்ததே. இஸ்லாம் என்பது எல்லோருக்கும் அருளாக இருந்தாலும் ஒப்பீட்டு ரீதியில் அது பெண்ணினத்திற்கே பேரருளாக அமைந்தது என்பது உண்மையாகும். இன்று உலகளாவிய ரீதியில் பெண்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும். பெண்கள் சுதந்திரமாக

வழிப்படுத்தப்பட வேண்டும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் பால்நிலை சமத்துவம் பேணப்படல் வேண்டும் என பல்வேறு போரட்டங்கள் எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பெண்ணின் பெருமையை நிலைநாட்டி பெண்ணின் மகத்துவத்தை பேணிய ஒரே மார்க்கம் இஸ்லாம் என்றால் மிகையாகாது. இந்த வகையில் இஸ்லாம் பெண்களிற்கு பொருளாதார ரீதியான பல உரிமைகளை வழங்கியுள்ளன. அவற்றை ஆய்வுப்பிரதேசத்துடன் தொடர்புபடுத்தி விரிவாக ஆராயலாம்.

01.வாரிசுச் சொத்து பெறும் உரிமை

இஸ்லாம் பெண்களுக்கு வாரிசுச் சொத்தில் பங்கு உண்டு என்கின்றது. ஆண் எவ்வாறு சொத்துக்களை வைத்திருக்க அனுமதி உள்ளதோ அதே போன்று பெண்ணும் சொத்துக்களை வைத்திருக்க அனுமதி உண்டு. ஒரு பெண் மகளாக மணைவியாக தாயாக பாட்டியாக சகோதரியாக சில போது பெரிய தாய்(பெரியம்மா) சிறிய தாய்(சாச்சி) போன்ற நிலைகளில் வாரிசுச் சொத்தில் பங்கு கொள்கின்றாள்.

ஜாஹிலியாக் காலத்தில் இதற்கு நேர் மாற்றமான நிலை காணப்பட்டது. ஆண் இறந்து விட்டால் அவர் விட்டுச் சென்ற சொத்துக்களும் அவர்களுடைய பெண் மக்களும் பண்டங்களோடு பண்டமாக பகிர்ந்தளிக்ககப் பட்டனர். பெண்களை போகப்பொருளாக பயன்படுத்திவந்த நிலையை மாற்றிய இஸ்லாம் பெண்ணுக்கு வாரிசுச் சொத்தில் எந்தளவு தூரம் பங்கு வழங்கியுள்ளது என்பதை பின்வரும் குர்ஆன் வசனம் உணர்த்துகின்றது.

"பெற்றோர் அல்லது நெருங்கிய உறவினர்கள் விட்டுச் சென்ற சொத்தில் ஆண்களுக்கு பங்கு உண்டு அதே போன்று பெற்றோர் அல்லது நெருங்கிய உறவினர்கள் விட்டுச் சென்ற சொத்தில் பெண்களுக்கும் பங்கு உண்டு" (அந்நிஸா 07)

"உங்கள் பிள்ளைகளில் ஒரு ஆணுக்கு இரண்டு பெண்களுக்கு கிடைக்கும் பங்கு போன்று கிடைக்கும் என்று அல்லாஹ் உங்களுக்கு உபதேசிக்கின்றான். பெண்கள் மட்டுமிருந்து அவர்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டிருந்தால் அவர்களுக்கு இறந்து போனவர் விட்டுச் சென்றதில் முன்றில் இரண்டு பாகம் கிடைக்கும்.ஆனால் ஒரே பெண்ணாக இருந்தால் அவள் பங்கு பாதியாகும். இறந்தவருக்கு குழந்தை இருக்குமானால் இறந்தவர் விட்டுச் சென்றதில் ஆறில் ஒரு பாகம் அவரது பெற்றோர் ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆனால் இறந்தவருக்கு குழந்தை இல்லாதிருந்து பெற்றோர் மாத்திரமே வாரிசாக இருந்தால் அவர் தாய்க்கு முன்றில் ஒரு பாகம் (மீதி தந்தைக்குரியதாகும்). இறந்தவருக்கு சகோதரர்கள் இருந்தால் அவர் தாய்க்கு ஆறில் ஒரு பாகம்தான் (மீதி தந்தைக்குரியதாகும்).இவ்வாறு பிரித்துக் கொடுப்பது அவர் செய்துள்ள மரணசாசனத்தையும் கடனையும் நிறைவேற்றிய பின்னர்தான். உங்கள் பெற்றோர்களும் குழந்தைகளும் இவர்களில் யார் நன்மையளிப்பதில் உங்களுக்கு நெருக்கமாக இருப்பவர்கள் என்று நீங்கள் அறிய மாடடீர்கள். எனவே இந்த பாகப்பிரிவினை அல்லாஹ்விடமிருந்துவந்த கட்டளையாகும். நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவனாகவும் மிக்க ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்." (அந்நிஸா் 11)

எனவே வாரிசுச் சொத்தில் ஓர் அங்கமாக கருதப்பட்ட பெண்ணை வாரிசுச் சொத்தில் பங்கு கொள்ளும் நிலைக்கு இஸ்லாம் மாற்றியுள்ளது. எனவே ஆண்களைப்போன்று பெண்களுக்கும் சொத்துரிமையில் பங்கு உண்டு என்பது புலனாகின்றது.

இப்போது ஆய்வுப் பிரதேசத்தில் வாரிசுச் சொத்துக்களைப் பெறுவதில் பெண்களின் நிலை என்ன என்பதை நோக்கினால் இங்கு நிலவும் மார்க்க அறிவின்மையால் பெண்களுக்கு இவ்வுரிமைகள் பற்றி தெரியவில்லை.அதனால் அவர்களுக்கு இவ்வுரிமை கிடைப்பதுமில்லை. இன்னுமொரு வகையில் பார்க்கப் போனால் வாரிசுச் சொத்துக்கள் வழங்குமளவிற்கு யாரிடமும் அதிகப்படியான சொத்துக்கள் காணப்படுவதில்லை.மாறாக ஒரு பெண் திருமணம் முடித்தபின் சில வேளைகளில் தாயின் நிலத்தினை அல்லது வீட்டினை மாத்திரம் மகளுக்கு வழங்கும் நடைமுறை சில இடங்களில் மாத்திரம் காணப்படுகின்றது.

02. தொழில் செய்யும் உரிமை

இஸ்லாத்தை பொறுத்தவரை தொழில் செய்யும் உரிமை பெண்களுக்குன்டு. ஆனால் சமூகத்தின் பார்வையில் இவ்வுரிமை அதிக விமர்சனத்திற்குள்ளாவதும் உண்டு. கலாநிதி செய்பா ஷேரிஸ் ஷாம்லி கூறுகையில் இஸ்லாம் வேலை செய்வதற்கான உரிமையை பெண்ணுக்கு வழங்கியுள்ளது. சொத்துக்களை வைத்துக் கொள்வதற்கான உரிமையை பெண்ணக்கு வழங்கியுள்ளது. பெண்கள் மருத்துவம், கற்பித்தல், சிவில் மற்றும் நிதித்துறை என்பவற்றில் வேலை செய்யலாம். இநத உரிமை திருமணத்திற்கு முன்னரும் பின்னரும் இவ்வாறே உள்ளது. என்கிறார்.

“ஆண்கள் சம்பாதித்தவை ஆண்களுக்குரியது. அதே போன்று பெண்கள் சம்பாதித்தவை பெண்களுக்குரியது” (4.32)

இன்றைய காலகட்டத்தில் உலகெங்கும் முஸ்லிம் பெண்கள் சகல துறைகளிலும் பங்கேற்கின்றனர். ஆனால் எமது நாட்டு நிலவரங்களையும் எடுத்து நோக்கினால் முஸ்லிம் பெண்கள் தொழில் புரிவது பற்றிய ஒரு தெளிவின்மை காணப்படுகின்றது. குடும்பத்தை பராமரிக்கும் பொறுப்பை இஸ்லாம் ஆணிடம் கையளித்துள்ளது. இதனால் பெண் வேலைக்குச் செல்ல அனுமதியில்லை என்ற பிழையான வாதம் முன்வைக்கப்படுகின்றது. ஆனால் ஒரு பெண் வேலைக்குச் செல்வதும் செல்லாமலிருப்பதும் அப்பெண்ணைப் பொறுத்த விடயம் ஆனால் இஸ்லாத்தில் பெண் தொழில் செய்ய இடமில்லை என்பது முற்றிலும் தவறான கருத்தாகும். இஸ்லாமிய வரலாற்றில் பெண்கள் தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டதை பல நிகழ்வுகளினூடாக அறியலாம்.

உமர்(றழி) அவர்கள் சியா பின்த் அப்துல்லாஹ் என்ற பெண்ணை தலை நகரிலுள்ள உள்ள சந்தையில் பரிசோதகராமக நியமித்தார் என இப்னு ஹஜர் குறிப்பிட்டுள்ளார். ஐகலா உம்மு பனீ அஸ்மர் வணிகப் பெண்ணாக விளங்கினார்.

ஆகவே இந்த சம்பவங்கள் மூலம் இஸ்லாம் தொழில் செய்யும் உரிமையை பெண்களுக்கு வழங்கியுள்ளது என்பதை அறியலாம். ஆனால் பெண்கள் தொழில் புரிதல் தொடர்பாக ஷரீஆவின் வரையறைகளையும் ஒழுங்கு முறைகளையும் பேண வேண்டும். இதில் இஸ்லாம் பின்வரும் அடிப்படைகளை வகுத்துள்ளது. இவற்றைப் பின்பற்றி ஒரு பெண் தொழில்புரிய அனுமதிக்கப்பட்டுள்ளது.

- பெண்களின் இயல்பு பாதுகாக்கப்பட வேண்டும்
- வீடு என்ற சாம்ராஜ்யத்தின் நிர்வாகம் பாதிக்கப்படக் கூடாது.
- மார்க்கம், குடும்பம், சமூகம் பாதிக்கப்படக் கூடாது.
- பெண்ணின் நலம் பாதிக்கப்பக் கூடாது.

ஆனால் இன்றைய முஸ்லிம் சமூகத்தில் பெண்கள் வெளிநாடு சென்று உழைப்பதையும் காணலாம். இந்த தொழிலானது மேற்குறிப்பிட்ட வரையறைகளுக்கு உட்படுவதில்லை. ஒரு மஹ்ரமான துணையின்றி பிரயாணத்தில் ஈடுபடுவதும் பிற இடங்களில் போய் தங்குவதும் கூடாது. இவ்வாறான தொழிலை இஸ்லாம் அனுமதிக்கவில்லை.

ஆனால் மலையடி கிராமத்தை பொறுத்தவரையில் அதிகமான பெண்கள் வெளிநாடு செல்பவர்களாக உள்ளனர். ஏனைய இடங்களில் காணப்படுவது போன்று தொழில் புரிவதில் எவ்வித தடையும் ஆண்களால் விதிக்கப்படுவதில்லை. மாறாக பெண்களின் உழைப்பில் வாழ்பவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்களின் முக்கிய நோக்கம் பணமேயாகும். அது எவ்வாறு கிடைத்தாலும் பரவாயில்லை. இதனால் மனைவியை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கும் தயங்குவதில்லை. அனால் இஸ்லாமிய வரையறையைப் பேணி தொழில் புரியும் பெண்களும் இங்கு காணப்படுகின்றனர். இங்குள்ள பெண்கள் கைத்தொழில் புரிவோர், அரச ஊழியர்கள் போன்றோரும் காணப்படுகின்றனர். இதனால் குடும்ப செலவினங்கள் குறைக்கப்படுகின்றன.

ஆகவே இக்கிராமத்தில் பெண்களுக்கு தொழில் புரியும் உரிமையானது எவ்வித தடையுமின்றி கிடைத்தாலும் அதன் நடைமுறையில் சில தொழில்கள் இஸ்லாமிய வரையறையை மீறகின்றன. மார்க்க அறிவின்மையையே இதற்கான பிரதான காரணமாக குறிப்பிலாம்.

| எண் | தொழில் வகை | பெண் |
|---|---|---|
| 01 | ஆசிரியர் | 08 |
| 02 | வங்கி உத்தியோகத்தர் | 01 |
| 03 | சமுர்த்திஅபிவிருத்தி உத்தியோகத்தர் | 03 |
| 04 | தாதிகள் | 00 |
| 05 | Mid wife | 01 |
| 06 | எழுத்தாளர்கள் | 01 |
| 07 | இடியப்பம் சுடுதல் | 09 |
| 08 | மா இடித்தல் | 02 |
| 09 | தையல் வேலை | 10 |
| 10 | கோழி வளர்ப்பு | 12 |
| 11 | வெளிநாடு | 20 |
| 12 | கடைத்தொழில் புரிவோர் | 10 |

(மூலம்: தொழில் புரியும் பெண்கள் பற்றிய விபரங்கள்- கிராம சேவகர் பிரிகனை் கையேடு -2017)

03.வஸிய்யத் செய்யும், பெறும் உரிமை

ஒரு பெண்ணுக்கு தன்னுடைய சொத்துக்களை வஸிய்யத் செய்வதற்கும் மற்றொருவரால் வஸிய்யத் செய்யப்பட்ட சொத்துக்களை பெறும் உரிமையினை இஸ்லாம் வழங்கியுள்ளது. உதாரணமாக குறித்த பெண்ணுக்கு தனது சொத்திலிருந்து இந்த அளவைக் கொடுங்கள் என சாசனத்தில் குறிப்பிட்டிருந்தால் அந்த பங்கை பெறுவதற்குரிய உரிமையை அவள் பெறுகிறாள்.

ஆனால் இதுபற்றிய மார்க்க அறிவின்மை காரணமாகவும் வஸிய்யத் செய்யுமளவிற்கு சொத்துக்கள் காணப்படாமையாலும் ஆய்வுப் பிரதேசத்தில் இவ்வுரிமை நடைமுறையில் இல்லை.

04. கொடுக்கல் வாங்கல் விற்றல் உரிமை

இஸ்லாத்தின் மூலம் கொடுக்கல் வாங்கல்(வாங்குதலும் விற்றலும்) உரிமையை ஒரு பெண் பெறுகின்றாள். உதாரணமாக ஒரு ஒரு பெண் திருமணத்திற்கு முன்போ பின்போ சுய விருப்பத்தில்

தன்னுடைய சொத்தை தான் விரும்பிய வழியில் செலவழிக்கலாம். விரும்பிய பொருட்களையோ சொத்தையோ நிலத்தையோ வாங்கலாம் விற்கலாம். அவ்வாறே தனக்குரிய சொத்தை ஆணின் துணையின்றி வாடகைக்கு விடவும் முடியும். ஆனால் இவ்வுரிமையை பிரிட்டிஸ் அரசாங்கம் 1870 களிலே பெண்களுக்கு வழங்கியது. இஸ்லாம் 1400 ஆண்டுகளுக்கு முன்பே இவ்வுரிமையை வழங்கிவிட்டது. கதீஜா (ரழியல்லஹூ அன்ஹா) பெரும் தொழிலதிபராக திகழ்ந்ததாக இஸ்லாமிய வரலாறு கூறுகின்றது.

ஆய்வுப் பிரதேசததில் அதிகமாக விவாகரத்துக்கள் இடம்பெறுகின்றமையால் கணவனை இழந்த பெண்கள் தொழில் புரியும் நிமித்தம் அதிகளவில் கடைகள், வீடுகளை வாடகைக்கு கொடுத்தல் மூலமும் வருமானங்களை பெற்றுக்கொள்கினறனர். ஆனால் சில இடங்களில் ஆணின் துணையின்றியோ, விருப்பமின்றியோ நிலத்தையோ பொருளையோ தன் சுய விருப்பின்படி விற்க முடியாத நிலை காணப்படுவதாக கலந்துரையாடலின் போது தெரிவித்திருந்தனர்.

05. வக்பு செய்யும், பெறும் உரிமை

தனது உடமையை மஸ்ஜிதுக்கோ த.ஃவா பணிக்கோ பொது நிலையங்கள் அமைப்பதற்கோ வக்பு செய்யும், பெறும் உரிமையை இஸ்லாம் பெண்ணுக்கு வழங்கியுள்ளது.

ஆனால் மலையடிக்கிராமத்தை பொறுத்தவரை அந்தளவு சொத்துக்கள் காணப்படாமையினால் இந்த உரிமை பற்றி சிலருக்கு தெரியாது. காரணம் என்னவெனில் இப்பிரதேசம் பின்தங்கிய அபிவிருத்தி நடவடிக்கைகளை கொண்டதாகவும்,வறுமையுடன் கூடிய மக்கள் தொகையை அதிகம் கொண்ட பிரதேசமாகவம் காணப்படுகின்றமையாகும். ஆய்வ முடிவுகளின்படி இவ்வுரிமை இருப்பதே பெரும்பாலான(95 வீதம்) மக்களுக்கு தெரியாது. அத்தோடு இதுவரை வக்பு செய்யப்பட்டவாகவோ, பெறப்பட்டதாகவோ எவ்வித புள்ளிவிபரங்களும் இல்லை.

06. ஸதகா செய்யும் உரிமை

தன்னுடைய சொத்துக்களை ஸதகா செய்வதற்கும் தன்னுடைய அசையும் அசையா சொத்துக்களை தர்மம் செய்வதற்கும் பெண்ணுக்கு அனுமதியுண்டு.

ஸைனப் (ரழியல்லாஹூ அன்ஹா) அவர்கள் கைத்தொழில் செய்து தான் தயாரித்த பொருட்களை விற்று அதன் முலம் கிடைத்த வருமானத்தை அதிகம் தர்மம் செய்பவர்களாக இருந்தனர். தான் உழைத்ததை அதிகமதிகம் அடுத்தவர்களுக்கு கொடுத்து உதவியதையும் அவர்களின் வரலாற்றில் காணலாம்.

ஆய்வுப் பிரதேசத்தில் இவ்வுரிமையை எடுத்து நோக்குவோமாயின், ஸதகா செய்யுமளவிற்கு பாரிய நிதி காணப்படாவிட்டாலும் தம்மால் முடிந்த அளவிற்கு தேவையான நேரங்களில் ஸதகா செய்பவர்களாக உள்ளனர். ஊதாரணமாக நோயாளர்களின் மருத்துவச் செலவிற்கோ அல்லது நாட்டின் ஏனைய பாகங்களில் வாழ்பவர்களுக்கு நிவாரண உதவிகள் கோரப்படும் போதோ ,அனைவருமாக சேர்ந்து சிறிய தொகைகளில் திரட்டி மொத்தமாக பணத்தினை வழங்குபவர்களாக காணப்படுகின்றனர். இவ்வாறான அதிக உதவிகள் வந்து சேரும் கிராமமாக மலையடிக் கிராமம் 01 பதிவு செய்யப்பட்டுள்ளது.

07. இரவல் வாங்கும் வழங்கும் உரிமை

தன்னிடம் இருக்கின்ற பொருட்களை இரவல் வழங்கவும் பிறரின் பொருட்களை இரவல் பெறவும் ஒரு பெண் உரிமை பெறுகின்றாள்.

ஆய்வுப்பிரதேசத்தில் இந்த உரிமை சர்வ சாதாரணமாக இடம் பெறுகின்ற செயலாக காணப்படுகின்றது.

08. பிணை நிற்கும் உரிமை

கொடுக்கல் வாங்கலின்போது ஒருவரின் சார்பில் பிணைநிற்க அல்லது பொறுப்பு நிற்க ஆணைப் போன்று பெண்ணுக்கும் அனுமதியுண்டு.

ஆனால் ஆய்வுப் பிரதேசத்தில் இதனை ஆண்கள் தான் அதிகம் செய்வார்கள் பெண்கள் செய்வது குறைவு அவர்கள் பிரச்சினை ஏற்படும் என அச்சம் கொள்வதனால் பெரிதாக நிற்பதில்லை.இதனால் இவ்வுரிமையானது பெண்களுக்கு மறுக்கப்படும் நிலையே இங்கு காணப்படுகின்றது.

09. அடகு வைக்கும் உரிமை

ஷரீஆ வரம்புகளை மீறாமல் பெண்கள் அடகு வைக்கும் உரிமையை இஸ்லாம் வழங்கியுள்ளது. இந்த வகையில் இவ் உரிமையை இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ளது.

இப்பிரதேசத்தினைப் பொறுத்த வரை இதனை அதிகம் பெண்கள்தான் செய்வார்கள். இவர்கள் வட்டி வங்கிகளிடம் தான் அதிகமாக அடகு வைக்கின்றனர். இதனால் இங்கு இஸ்லாமிய வரையறை மீறப்படுகின்றது. மேலும் அடகு வைப்பதன்முலம் பெறும் பணத்தினை பெண்களின் அனுமதியின்றி ஆண்கள் பயன்படுத்தவும் செய்கின்றனர்.

10. மஹர் எனும் திருமணக் கொடை பெறுவதற்கான உரிமை

இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள மிகச் சிறப்பான உரிமை இதுவாகும். வேறு எந்தவொரு சமயமும் இத்தகைய உரிமையை பெண்களுக்கு வழங்கி அவர்களை கண்ணியப்படுத்தவில்லை. முஹர் என்று அழைக்கப்படும் திருமணக்கொடை இஸ்லாத்தில் முக்கியமானதாகும். இது இன்றி திருமணமே செல்லுபடியாகாது. துிரமணத்தின் போது தனக்கான மஹரை கேட்டு பெற்றுக் கொள்வது பெண்ணின் உரிமையாகும். மனைவி என்னதான் பணக்காரியாக இருந்தாலும் அவளுக்கு மஹர் கொடுப்பது ஆணின் கடமையாகும். இவ்வாறு பெற்றுக்கொண்ட மஹரை தன் விருப்பப்படி பெண் செலவு செய்ய முடியும்.

ஆனால் இன்றைய இஸ்லாமிய சமூகத்தில் இவ்வுரிமை அனேகமாக நடைமுறையில் இருப்பதில்லை. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இந்நிலமை தலை விரித்தாடுவதை அவதானிக்கலாம். ஆய்வுப் பிரதேசமும் கிழக்கிலே அமைந்திருப்பதால் இங்கும் இந்நிலமைதான். இங்கு இள வயதுத் திருமணங்கள் அதிகமாக நிகழ்ந்தாலும் இன்னுமொரு புறம் முதிர் கன்னிகளின் எண்ணிக்கையும் அதிகமாகவே உள்ளது. மஹர் எனப்படும் பொருளாதார உரிமை மறுக்கப்பட்டு சீதனத்தின் பிடியில் சிக்கிக் கொண்டதால் வந்த விளைவே இதுவாகும்.

11.விவாகரத்தின் போதான பராமரிப்பைப் பெறும் உரிமை (மதா∴)

ஓர ஆண் மனைவிக்கு தலாக் கொடுத்து பிரிந்த பின்பும் இத்தாவின் காலத்தில் அவளுக்கான செலவினங்களையும் அவனே அளித்தாக வேண்டும். பிள்ளைகள் இருந்தால் அவர்களுக்கான எல்லா செலவினங்களையும் அவனே வழங்க வேண்டும். இவ்வாறான பராமரிப்பை ஆணிடமிருந்து பெறும் உரிமையை இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ளது.

ஆனால் இக்கிராமத்ததை பொறுத்தவரையில் நிலமை தலைகீழாக உள்ளது. இங்கு விவாகரத்துக்களே இஸ்லாமிய முறைப்படியோ காதி நீதிமன்றத்திற்கு சென்றோ இடம்பெறுவதில்லை. இவர்கள் பிரிய வேண்டும் என தீர்மாணித்து விட்டால் பிரிந்து விடுவர். ஆனால் சட்டபூர்வமாக தலாக் செய்யப்பட்டவர்களும் அதிகமாகவே இருக்கின்றனர். எனினும் பிரிந்த பின்பு இத்தாவின் காலத்தில் பெண்ணுக்கான செலவினங்களையோ பிள்ளைகளுக்கான செலவினங்களையோ ஆண் ஏற்றுக் கொள்வதில்லை. இதனால் பெண்ணுக்கு இவ்வுரிமை மறுக்கப்படுகின்றது.

12.ஹிபத் எனும் அன்பளிப்புக்கான உரிமை

ஒரு முஸ்லிம் பெண் தனது தாய் தந்தையரின் சொத்துக்களை உயிருடன் உள்ள காலப்பகுதியிலே அன்பளிப்பாக பெற்றுக் கொள்ளும் உரிமை உடையவள். இது ஹிபத் எனப்படுகின்றது. ஸஹ்த் பின் அபீ வக்காஸ் (ரழி) அவர்கள் முழுச் சொத்தையும் அல்லாஹ்வின் பாதையில் செலவிட முயன்ற போது நபி (ஸல்) அவர்கள் மூன்றில் ஒரு பங்கை மாத்திரம் பெற்றுக் கொண்டு மிகுதியை உமது பிள்ளைகளுக்கு பகிர்ந்து கொடும் (இரு மகள்கள்) என பதிலளித்தார்கள். இவை யாவும் ஆணைப்போரவே பெண்ணும் பெற்றோரிடமிருந்து சொத்துக்களை அன்பளிப்பாகப் பெறும் சம உரிமையைப் பெற்றிருக்கிறாள் என்பதைக் காட்டுகின்றன.

இவ்வுரிமை பற்றிய இஸ்லாமிய அறிவு இல்லாவிட்டாலும் கூட சாதாரணமாக ஆய்வுப் பிரதேசத்தில் பின்பற்றப்படுகின்றது. ஆனால் வறுமை காரணமாக பாரிய அளவிலான அன்பளிப்புக்கள் வழங்கப்படுவதில்லை.

13.பராமரிப்புக்கான உரிமை


திருமணத்திற்கு முன் பெண் மக்களைப் பராமரிப்பது தகப்பன் மீதும் ஆண் மக்கள் மீதும் கடமையாகும். திருமணத்தின் பின்னர் இப்பொறுப்பு கணவனைச் சாரும். இது ஆண்கள் மீதான கட்டாயக்கடமையாகும். அதே சமயம் பெண்களின் உரிமையுமாகும்.

ஆய்வுப்பிரதேசத்தில் நிகழும் அதிகப்படியான விவாகரத்தினாலும் தலாக்கிற்கு பின்னரான மதா எனப்படும் பராமரிப்புத் தொகை ஆண்களால் வழங்கப்படமையினாலும் இவ்வுரிமையானது 45 வீதமான பெண்களுக்கு மறுக்கப்படுகின்றது.

14.வருமானத்தை தானே வைத்திருப்பதற்கான உரிமை

எந்தவொரு பெண்ணுக்கும் தனத வருமாணத்திலுருந்து குடும்பத்தின் பேரில் செலவளிக்க கடப்பாடு இல்லை. ஆயினும் விருப்பத்தின் பெயரிலும் பரஸ்பர புரிந்துனர்வின் பேரிலும் பெண் செலவளிக்க முடியும். மேலும் தனது தொழில் மூலமாகவோ அல்லது சொத்துக்கள் மூலமாகவோ ஈட்டும் வருமானத்தை தனது பெயரிலே வைத்துக் கொள்ளக் கூடிய உரிமையையும் இஸ்லாம் பெண்ணுக்கு வழங்கியுள்ளது.

ஆய்வுப் பிரதேசத்தினைப் பொறுத்தவரை பெண்களுக்கு தொழில் செய்வதற்கு சமவுரிமை வழங்கப்பட்டாலும் அவள் வருமானத்தை தானே வைத்திருக்கும் உரிமை பேணப்படுவதில்லை. மாறாக சில இடங்களில் ஆண்கள் தொழிலுக்குச் செல்லாமல் மனைவியின் வருமானத்தில் செலவுகளைச் செய்யும் நிலையும் காணப்படுகின்றது. குறிப்பாக வெளிநாடு சென்று பொருளீட்டும் பெண்களின் கணவன்மார் இவ்வாறு காணப்படுகின்றனர். இதனால் பெண் தான் சம்பாதித்தவற்றை குடும்பத்திற்காக செலவு செய்ய வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்படுகின்றாள்.




(மூலம் : வினாக் கொத்து)

மலையடிக்கிராமம் 01 இல் வசிக்கும் பெண்கள் பொருளாதாரரீதியான உரிமைகளை பெறுவதில் எதிர்நோக்கும் தடைகளும் சவால்களும்.

இஸ்லாம் பெண்ணுக்கு பல உரிமைகளை வழங்கியுள்ளது. இந்தவகையில் பெண்களுக்கு வழங்கப்பட்ட பொருளாதார ரீதியான உரிமைகளை பெற்றுக்கொள்வதில் ஆய்வுப் பிரதேசமான, சம்மாந்துறை மலையடிக்கிராமம்-01 பிரதேசத்தில் இஸ்லாமிய பெண்கள் பல்வேறு சாவல்களை முகம் கொடுக்கின்றனர்.

1. இஸ்லாம் பற்றிய பூரணமான அறிவின்மை

பெண்களின் பொருளாதார உரிமைகள் தொடர்பான தகவல்கள்களை முழுமையாக அறிந்திருக்கவில்லை. அது பற்றிய பூரண அறிவற்றவர்களாக காணப்படுகின்றனர்.

2. கல்வியறிவின்மை

இங்குள்ள அதிகமான பெண்கள் கல்வியறிவற்றவர்களாக காணப்படகின்றனர். பாடசாலைக் கல்வியை இடை நிறுத்தியவர்களாகவும் எது சரி, எது தவறு என்று சிந்தித்து செயற்பட முடியாதவர்களாகவும் காணப்படுகின்றனர்.

| பட்டதாரிகள் | உயர் தரம் பயின்றோர் | சாதாரண தரம் பயின்றோர் | தொழிநுட்ப கல்லூரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 04 | 35 | 139 | 19 | 197 |

3. வறுமை, பொருளாதார பின் தங்கிய நிலை

இங்கு நிலவுகின்ற அதிகப்படியான வறுமை காரணமாக அதிகளவான சொத்துக்கள் 95 வீதமானோரிடம் காணப்படுவதில்லை. இதனால் வாரிசுரிமை, வஸிய்யத் பெறல் வக்பு முதலிய பொருளாதார உரிமைகள் பெண்களுக்கு கிடைப்பதில்லை.

4. குடும்பப் பிரச்சினைகள்

சில குடும்பங்களில் ஏற்படும் பிரச்சினைகள் , தகராறுகள் காரணமாக அவர்களுக்கு சொத்துக்கள் வழங்கப்படாமை.

5. விதவைகளுக்கு பொருளாதார உரிமைகள் முற்றாக மறுக்கப்படுதல்.


இங்கு விவாகரத்துக்கள் அதிகம் நிகழுவதால் விதவைகளின் எண்ணிக்கையும் அதிகம். ஆனால் இவர்களுக்கு விவாகரத்தின் போதான பராமரிப்பு தொகையும் வழங்கப்படுவதில்லை. தொழில் செய்யும் உரிமையும் சமூகத்தால் மறுக்கப்படுகின்றது.

| வயதுக் கட்டமைப்பு | விதைவைகள் |
|---|---|
| 15-30 | 03 |
| 30-50 | 21 |
| 50-64 | 17 |
| 64 க்கு மேல் | 23 |
| மொத்தம் | 64 |

6. இஸ்லாமிய வரையறை மீறப்படுதல்

- பெண்கள் தொழில் புரிய வெளிநாடு செல்லல்
- அடகு வைத்தலில் வட்டி கலத்தல்
- பெண்ணின் விருப்பமின்றி அவள் சம்பாதித்தவற்றை செலவு செய்தல்
- ஆண் தொழிலுக்குச் செல்லாது பெண்ணின் உழைப்பில் வாழ்தல்.

7. வட்டியில் அதிக ஈடுபாடு




(மூலம்: வினாக்கொத்து)

பெண்களுக்கான பொருளாதார உரிமைகளுக்கு தடையாக உள்ள அம்சங்களை களைவதற்கான தீர்வுகளை முன்வைத்தல், வழிகளை இணங்கானல் மற்றும் இஸ்லாமிய உரிமைகளை பெறும் வழிகளை உருவாக்கல்.

- இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள பொருளாதார உரிமைகள் தொடர்பான கருத்தரங்குகளை மேற்கொள்ளல்.
- ஆணுக்கு பெண் அடிமை இல்லை என்ற சிந்தனையை ஏற்படுத்துதல்.
- இஸ்லாமிய முறையில் கடன்களை வழங்க உதவி செய்தல்
- இஸ்லாமிய பொருளாதார சட்டவிதிகளை தெளிவுபடுத்தல்.
- மார்க்க சொற்பொழிவுகளை மேற்கொள்ளல்.
- வீட்டுச் சூழல் பாதிப்படைதலை தவிர்த்தல் வேண்டும்.
- பெண்களுக்கான மார்க்ககல்வி உலகக் கல்வி நிலையங்களை ஏற்படுத்துதல்.
- மஹ்ரம் துணையின்றி வெளிநாடு செல்வதை தடுத்தல்.
- வறுமையைப் போக்குவதற்கு வேறு தொழில்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**முடிவுரை**

இஸ்லாம் பெண்களுக்கு பொருளாதார உரிமைகளை வழங்கினாலும் அது சமூகத்தில் நடைமுறையற்ற செயலாக காணப்படுகின்றது. இன்னும் சில உரிமைகள் இஸ்லாமிய வரையறையை மீறி நடைமுறைப்படுத்தப்படுகின்றது. சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பின்தங்கிய கிராம சேவகப் பிரிவில் ஒன்றான மலையடிக்கிராமம் 01 இல் வசிக்கும் பெண்கள் பொருளாதாரரீதியான உரிமைகளை பெறுவதில் பல சிக்கல்களை எதிர் கொள்கின்றனர். மார்க்க புத்திஜிவிகள் முடிந்தளவு தங்களது கவனத்தினை மலையடிக்கிராமம் 01 இல் செலுத்தினால் பொருளாதார உரிமைகளை அந்த பகுதி பெண்கள் பெற்றுக்கொள்வார்கள். மேலும் தங்கள் உரிமைகளை இஸ்லாமிய வரையறைக்குட்பட்டு அனுபவிக்கவும் அவர்களுக்கு விழிப்புணர்வூட்ட

வேண்டும். இது சாத்தியமாகுமிடத்து மலையடிக்கிராமம் 01 இல் வசிக்கும் பெண்கள் பொருளாதாரரீதியான உரிமைகளை உரிய முறையில் பெற்று பின் தங்கிய கிராமம் என்ற நிலையிலிருந்து இதனை மீட்டெடுக்க முடியும்.

**உசாத்துணைகள்**


1. சிவகாமசுந்தரி,சு.(1998), ‘‘பெண்கள் உலகின் கண்கள்’’ பாவை பப்ளிகேசன்,சென்னை.
2. அக்பர்,ஆர்.(2013), ‘‘பெண் நீதமும் நிதர்சணமும’’ அல்ஹசனாத் வெளீட்டகம், கொழும்பு இலங்கை
3. ஜாகிர் நாயக் ‘‘இஸ்லாம் வழங்கும் பெண்ணுரிமைகள்’’, சாஜிதா புக் சென்டர்.
4. ரஸ்மின், எம். சி. (2015), ‘‘பால் நிலை மற்றும் சமத்துவ நீதி’’ இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியளாலர் மன்றம்.
5. ஸலபி, (2016), ‘‘தொழிலாளர் உரிமைகள’’, விடியல், இலங்கை முஸ்லிம் வாலிபர் ஒன்றியம்.
6. ருஸ்வி, எம்.டி.எம்.(2017),’’ரமழான் பொருளாதார மேம்பாட்டுக்கான காலம’’, அல்ஹஸனாத், இஸ்லாமிய இலட்சியக் குரல்.
7. http;//www.sheikhagar.org/articles/annisa/308-women-working2
8. https;//0nlinepj.com ss